பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 20 வெள்ளிக்கிழமை 05.09.2025 கதிர் 299

### இது ரகசியம் அல்ல!

ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றோம், பழைய ஆளும்தரப்புக்கள் போன்று நீதி விவகாரங்களில் தலையிடுவதில்லை என்றெல்லாம் தற்போதைய ☞2

# செம்மணியில் ஒரே இடத்தில் குவியலாக 8 எலும்புக்கூடுகள்

## அதிர்ச்சியூட்டும் மனிதப் புதைகுழி




செம்மணிமனிதப்புதைகுழியின்ஒரு பகுதியான அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் தோண்டப் ☞2

## செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் ஆளும்தரப்பு ஒருபோதும் தலையிடாது

### வசதிகளைச் செய்து கொடுப்போம் என்கிறார் அமைச்சர் நளிந்த

செம்மணி மனித புதைக்குழி விவகாரத்தில் ஆளும்தரப்பு தலையிடாது. ஆனால் பொலிஸ் விசாரணைகள்மற்றும்நீதிமன்றநடவடிக்கைகளுக்கு தேவையான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும். நீதிமன்றத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் ஆளும்தரப்பின் தலையீடு தேவையற்றதாகும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

செம்மணி மனித புதைக்குழி தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. குறித்த அறிக்கையில் செம்மணி விசாரணைகளுக்கு சர்வதேச நிபுணத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள அரச தகவல் ☞2

## சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக மனிதப் புதைகுழி விசாரணை நடத்தவில்லை

### நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையையோ அல்லது சர்வதேச சமூகத்தையோ திருப்திப்படுத்துவதற்காக காணாமல்போனோர் தொடர்பிலும், மனிதப்புதைகுழிகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின் கடந்த கால சம்வங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும். செம்மணி மனித புதைகுழி சர்வதே தரத்துடன் முறையாக ஆராயப்படுகிறது முழுமையான ஒத்துழைப்பை தொடர்ந்து வழுங்குவோம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

காணாமலாக்கப்பட்டோருக்கு எமது ஆளும்தரப்பில் நீதி கிடைக்காவிடின், எந்த ஆளும்தரப்பில்நீதிகிடைக்கும்? களுவாஞ்சிகுடி மற்றும் குருக்கள்மடம் மனித புதைகுழிகள் தொடர்பில்முறைப்பாடளிக்குமாறுபொதுக்களிடம் கேட்டுக்கொள்கிறேன். வழுங்கப்படும்தகவல்கள் பாதுகாக்கப்படுவதுடன் தகவல் ☞2

## வடக்கு கிழக்கு காணிப் பிரச்சினைக்கு தீர்வுகாண விசேட திட்டம் தயாராகிறது

நாட்டின வட, கிழககு மாகாணஙகளில நிலவும் காணிப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கிலான விசேட செயற்திட்டமொன்றுசர்வதேசபுலம்பெயர்வு அமைபபின அனுசரணையுடன ஐககிய நாடுகள் சபையினால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையின் வட, கிழக்கு ☞2

## ஆளும்தரப்பின் அடாவடிகளுக்கு எதிராக ஒன்றிணைய அனைவருக்கும் அழைப்பு

### முன்னிலை சோசலிசக் கட்சி விடுத்தது

எமதுகட்சிப்பணியிடத்தைப்பலவந்தமாக அபகரித்துள்ளதன் மூலம் ஆளும்தரப்பு தனியாருக்கு உரித்தான உடமை ஒன்றுக்குள் பலவந்தமாக நுழைந்து அந்த உடமைகளை பலவந்தமாகக் கைப்பற்றும் நடவடிக்கை ஒன்றையே செய்திருக்கிறது. ஆளும்தரப்பின்இவ்வாறான தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிராகஒன்றிணையுமாறு அனைவரையும் அழைக்கிறோம் என முன்னிலை சோசலி கட்சியின் பரப்புரை செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

முன்னிலைசோசலிசகட்சியின்கம்பஹா மாவட்ட பிரதான கட்சிப் பணியிடத்தின் மீது செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் நேற்று பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் ☞2

## தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை நிச்சயம் பெற்றுத்தருவோம்

### வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாகவும், அவற்றுக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதிலும், பொருளாதாரப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளின் ஊடாக நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதிலும் தாம் உறுதியாக இருப்பதாகவும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் உறுதியளித்துள்ளார். ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆளும்தரப்புத் தெரிவித்தாலும் அதன் செயற்பாடுகளில் அப்படிநம்பிக்கைகொள்ளக் கூடியதாகஇல்லைஎன்பதேகவலைதரக்கூடிய விடயம்.

இலங்கை பொலிஸ் துறையைச் சேர்ந்த முன்னாள் அதிகாரிகள் இருவரை இந்த என்.பி.பி. ஆளும்தரப்புசர்ச்சைக்குரியவிதத்தில் பதவியில் வைத்துள்ளது. அந்த இருவரும் அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாகவே என்.பி.பியுடன் சேர்ந்து இயங்கியவர்கள். அவர்களில் ஒருவர் இப்போது பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மற்றவர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கின்றார். முதலாமவர் சர்சைக்குரிய அதிகாரியான ஷானி அபேவர்த்தன. மற்றவர் ஓய்வுபெற்ற முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபரான ரவி செனிவிரத்ன.

இவர்களில் ரவி செனிவிரத்தினவிற்கு எதிராக கல்கிசை நீதிவான் நீதிமன்றில் ஒரு வழக்கு இருக்கிறது. குடிபோதையில் வாகனம் ஓட்டி விபத்தைத் தவிர்க்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கு விசாரணையை நிறுத்துமாறு கோரி ரவி செனவிரத்ன மேல்முறையீட்டு நீதிமன்றில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார். அதில் கல்கிசை நீதிமன்ற விசாரணைக்கு இடைக்காலத் தடை விதிக்கும்படியும் கோரியுள்ளார். அந்தத் தடை உத்தரவை மேன்முறையீட்டுநீதிமன்றம்வழங்கியிருந்தது.

ஆனால், அதற்காக அவர் கூறியிருக்கும் விடயம்தான் இங்கு பெரிதும் கவனத்திற்குரியதும் ஆளும்தரப்பு வெளிப்படுத்தும் விம்பத்திற்கு மாற்றாக இருப்பதுமாகும்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரரான ஓய்வுபெற்ற டி.ஐ.ஜி ரவி செனவிரத்ன சார்பாக ஆஜரான சட்டவாதி சுரேன் பெர்னாண்டோ, ரவிக்கு எதிரான வழக்கைத் தொடரமுடியாது என்று சட்ட மா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்திய பின்னரும் கல்கிசை நீதிவான் வழக்கைக் கைவிட மறுப்புத் தெரிவித்ததால் அங்கு தனது கட்சிக்காரருக்கு நீதி கிடைக்காது என்று நம்புகிறார் என்பதால் நிவாரணம் கேட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார் என்று தெரிவித்தார்.

வெள்ளவத்தை பொலிஸார் தனது கட்சிக்காரருக்கு எதிராக கல்கிசை நீதிவான் மன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததாகக் கூறிய அவர், தனது கட்சிக்காரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், தனது கட்சிக்காரருக்கு எதிரான குடிபோதையில் வாகனம் ஓட்டிய குற்றச்சாட்டைத் தொடர முடியாது என்று சட்டமாஅதிபர்பொலிஸாருக்குஅறிவுறுத்தினார் எனவும், பொலிஸார் அதனை நீதிவானிற்குத் தெரிவித்திருந்தாலும், சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அத்தகைய அறிவுறுத்தலை அனுப்பவில்லை என்பதைக் காரணம் காட்டி வழக்கைத் தொடர நீதிவான் முடிவு செய்தார் எனவும் சட்டவாதி சுரேன் பெர்னாண்டோ நீதிமன்றில் தெரிவித்தார்.

நீதிவானின் தவறான நடவடிக்கைகள் காரணமாகத் தனது கட்சிக்காரருக்கு எதிராக நியாயமானவிசாரணையைஅங்குஎதிர்பார்க்க முடியாத சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதன்படி, வழக்கைவேறுநீதிமன்றத்திற்கு மாற்றஉத்தரவுபிறப்பிக்கவேண்டும்என்றும், மனு விசாரணை முடியும் வரை கல்கிஸ்ஸை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணையை நிறுத்தி வைக்க இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்றும் சட்டவாதி சுரேன் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்தார்.

உண்மைகளை பரிசீலித்த நீதிபதிகள் அமர்வு, மனுவை விசாரிக்க முடிவு செய்து, நவம்பர் 25 நீதிமன்றுக்கு வருமாறு வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பிரதிவாதிகளுக்கு அழைப்பாண அனுப்ப உத்தரவிட்டதுடன், செப்டெம்பர் 23 பிரதிவாதிகளுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றைத் தாக்கல் செய்யவும் உத்தரவிட்டது.

இங்கு கவனிக்கப்படவேண்டியது ரவி செனவிரத்தினவிற்கு எதிரான வழக்கைக் கைவிடுவது என்று சட்டமா அதிபர் எடுத்திருக்கக்கூடிய முடிவுதான். ரணில் -மைத்திரி ஆட்சிக்காலத்தில் ராஜபக்சக்களுக்கு எதிராகப்பலவழக்குகள்தாக்கல்செய்யப்பட்டன. ஆனால், கோட்டாபய அரசுத் தலைவராக வந்து ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்ததும் அந்த வழக்குகள் அனைத்தும் தொடர்ந்து முன்னெடுக்க முடியாதவை என்று சட்டமா அதிபர்தான் கைவிட்டார்.

இது போன்று சட்டமா அதிபர் கைவிட்ட பல வழக்குகளை கடந்த ஆட்சிக் காலங்களில் உதாரணம் காட்ட முடியும். இப்போதும் ஆட்சித் தரப்பில் இருப்பவர்களுக்கு மிக நெருக்கமாக இருக்கும் ஒருவருக்கு எதிரான வழக்கை சட்டமா அதிபர் கைவிடுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்துவது என்பது எந்த வகையில் முன்னைய ஆளும்தரப்புக்களின் செயற்பாடுகளில் இருந்து மாறுபட்டது? சட்டமா அதிபரின் இந்த நடவடிக்கை நீதித்துறையில் இதுவரை காலமும் ஆளும்தரப்புக்கள் செலுத்தி வந்த தலையீடுகளையே மீண்டும் ஞாபகப்படுத்துவதைத்தவிர்க்கமுடியாது. தமது தரப்பில் உள்ளவர்கள் மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க மறுக்கும் என்பிபி ஆளும்தரப்பின் போக்கு முன்னைய ஆளும்தரப்புக்களில் இருந்து எந்த வகையில் வேறுபட்டது?.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவரும் மனிதப் புதைகுளி களில் இருந்து நேற்று ஒரேயிடத்தில் 8 எலும்புக்கூடுகள் குவியலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் புதைகுழியினுள் பிறிதொரு பகுதியில் இரண்டு என்புகூடுகள் சிக்கலான முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.



43நாள்களாக இடம்பெற்றுவரும் அகழ்வுப் பணிகளில் இவ்வாறு ஒரேயிடத்தில் குவியலாக இத்தனை எலும்புக்கூடுகள் கண்டுபிடிக் கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை. இதற்கு முன்னர் ஒன்றன் மேல் ஒன்றாக ஆகக் கூடுதலாக இரு எலும்புக்கூடுகள் ஒரே இடத்தில் மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை புதைகுழியின் மற்றுமொரு இடத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை இரண்டு என்புக்கூட்டுகளுக்கு மேலாக ஒரு என்புக்கூடும் , ஒரு என்புக்கூட்டின் தோள்பட்டைபகுதியுடன் தொடுகையுற்றவாறு மற்றுமொரு என்புக்கூடும் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவை இன்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 2ஆம் திகதி ஒரு என்புக்கூட்டு தொகுதியின் தோள்பட்டையுடன் தொடுகையுற்ற நிலையில் மற்றுமொரு என்புக்கூட்டு தொகுதி அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் , 29ஆம் திகதி ஒரு என்பு கூட்டு தொகுதியின் மார்பு பகுதியில் ஒப்பீட்டளவில் சிறிய என்பு கூடொன்றின் மண்டையோட்டு பகுதி காணப்பட்டவாறு இரு என்பு என்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுஅகழ்ந்துஎடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் , நாளை மறுதினம் சனிக்கிழமையுடன் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் அனுமதித்த 45 நாட்கள் நிறைவுறுகின்றன.

அதேவேளை அகழ்வு பணிகளுக்காக மேலும் 08 வார கால பகுதி தேவை என மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ள நிலையில் , அதற்கான பாதீடுகளை தயாரிக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, சிந்துப்பாத்தி மனித புதைகுழியில் இருந்து நேற்று புதிதாக 6 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. மேலும் 4 புதிய எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செம்மணிமனிதபுதைகுழியின்இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் ஒகஸ்ட் 25 தொடங்கப்பட்டது. நேற்று வியாழக்கிழமை 11ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இரண்டு கட்டங்களாக இதுவரையில் 52 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 218 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. 235 எலும்புக்கூட்டு தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்;டுள்ளன.

# ஐஸ் உற்பத்தி நிலையத்தை நடத்த இரு பாகிஸ்தானியர்

## இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர்

இந்த நாட்டில் 'ஐஸ்' உற்பத்தி போதைப்பொருள் உற்பத்தி நிலையத்தை நடத்துவதற்காக இரண்டு பாக்கிஸ்தானியர்கள் நாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கறுவாத்தோட்டம் புதிய பொலிஸ் நிலைய கட்டடத்தை நேற்று திறந்து வைத்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் மிக நீண்டகாலமாகக் குற்றச்செயல்களுடனான கலாசாரம் காணப்பட்டது. அந்தக் கலாசாரத்தால் தோற்றம் பெற்ற செயற்பாட்டாளர்களையே அண்மையில் கைது செய்தோம். நாட்டில் 'ஐஸ்' போதைப்பொருள் உற்பத்தி நிலையத்தை நடத்திச் செல்வதற்காக இரண்டு பாக்கிஸ்தானியர்கள் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர் என்று விசாரணைகளின்போது வெளிவந்துள்ளது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மேலும் தீவிரமாக ஆராயப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் சட்டத்தின் ஊடாக எடுக்கப்படும்.

நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்துவதற்காக பொலிஸாருக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். 159ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு பொலிஸ் நிலையங்களுக்கு உரிய வசதிகள் வழங்கப்படும் என்றார்.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் நளிந்த திஸநாயக்க தெரிவித்ததாவது:

செம்மணி மனித புதைக்குழி தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே அதனுடன் தொடர்புடைய விடயங்கள் நீதிமன் றத்துக்கே அறிவிக்கப்படும். நீதிமன்றம் சுயாதீனமான நிறுவனமாகும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான வசதிகள் அரசாங்கத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக விசேட குழுவொன்றினால் அதற்குரியநடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன. மறுபுறம் பொலிஸ் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அதற்கான தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு நாம் இடமளித்திருக்கின்றோம். அதற்கமைய அந்த விவகாரத்தில் நியாயமான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக நம்புகின்றோம் என்றார்.

## வடக்கு கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களில் நிலங்களுக்கான எல்லை நிர்ணயம், படையினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் தனியார் காணிகள், அரச கட்டமைப்புக்கள் உள்ளிட்ட ஏனைய தரப்பினரால் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும்காணிசுவீகரிப்புக்கள் என்பன உள்ளடங்கலாக காணி சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் சமகாலத்தில் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளன.

இப்பிரச்சினைகளுக்கு சுமுகமானதும், நியாயமானதுமான முறையில் தீர்வுகாணும் நோக்கில் சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் (ஐ.ஓ.எம்.) அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையினால் விசேட செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

அத்தோடு இச்செயற்திட்டத்தின்கீழ் அரச கட்டமைப்புக்கள், பாதுகாப்புத்தரப்பினர், சிவில் சமூக அமைப்புக்கள், படையினர் வசமுள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் உள்ளடங்கலாக இவ்விவகாரத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரும் உள்வாங்கப்படுவர் எனவும் தெரிய வருகிறது.

மேலும் இச்செயற்திட்டத்தின் ஊடாக வட, கிழக்கில் காணிப்பிரச்சினைகளுடன் தொடர்புடைய தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தல், படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், எல்லைகளை உரியவாறு மீள்நிர்ண யிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை உள்ளகக் கட்டமைப்புக்களுக்கு வழங்கல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குபவரின்பாதுகாப்புஉறுதிப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி மற்றும் குருக்கள்மடம் ஆகிய பகுதிகளில் மனித புதைகுழிகள் இருப்பதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய அப்பகுதிகளை அண்மித்த பகுதிகளுக்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சர் கண்காணிப்பு விஜயத்தை நேற்று வியாழக்கிழமை மேற்கொண்டிருந்தார்.

களக்கண்காணிப்பின்பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகாலங்களில்காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் முறையாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் ஆளும்தரப்பின் மீது அதீத நம்பிக்கைகொண்டுள்ளார்கள். இதனால்கடந்த காலங்களைகாட்டிலும்காணாமலாக்கபட்டோர் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வு பணிகள் சர்வதேச தரத்துடன் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் கண்காணிப்புடன் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

ஏனைய மனித புதைகுழிகள் இடத்தை காட்டிலும் குருக்கல்மடத்தின் நிலைமை மாறுப்பட்டது. 2014 ஆம் ஆண்டு இந்த இடம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 2019 ஆம் ஆண்டு இந்த இடத்தைப் பரிசோதனை செய்வதற்கு நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரிகளின் ஒத்துழைப்பு மற்றும் அகழ்வு பணிகளுக்கு தேவையான நிதியை வழங்குமாறு காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் குறித்த தரப்பினருக்கு வலியுறுத்தியுள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் கோட்டபய ராஜபக்ச மற்றும் அந்த ஆளும்தரப்பு அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. கடந்தகாலத்தை பற்றி பேசி இனி பயனில்லை. இருப்பினும் அந்த ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை தெளிவாக குறிப்பிட முடியும்.

எமது ஆளும்தரப்பு; ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும்கடந்தகால முறைப்பாடுகள் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலையீட்டுடன் முறையாக விசாரிக்கப்படுகின்றன. காணாமல்போனோர் அலுவலகம் தமது பணிகளுக்குரிய கட்டளைகளை பெற்றுக்கொண்டு எதிர்வரும் இரண்டு வாரத்துக்குள் கொழும்பில் இருந்து நீதிமன்ற சட்டவைத்திய அதிகாரிகளை அழைத்து வந்து கண்காணிப்புக்களை மேற்கொள்ளவுள்ளது.

இந்த அகழ்வு பணிகளுக்குரிய நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காகவே இன்று (நேற்று) இவ்வித்துக்கு வருகைத்தந்தேன். முறையான கண்காணிப்புக்களை தொடர்ந்து முறையான வழிமுறைகள் ஊடாக நிதி வழங்க தயாராகவே

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# மின்சார சபை ஊழியர்கள் இன்று முதல் சட்டப்படி வேலைசெய்யும் போராட்டம்

## பணிப் புறக்கணிப்புக்கு இரு வார கால அவகாசம்

இலங்கை மின்சார சட்டத்தின் பிரகாரம் மின்சார சபையில் மேற்கொள்ளவுள்ள மறுசீரமைப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று (நேற்று) நள்ளிரவு முதல் சட்டப்படி வேலையில் ஈடுபடப்போவதாக மின்சார சபை தொழிற்சங்கம் ஒன்று அறிவித்துள்ளது. தமது கோரிக்கைகளுக்கு செப்டெம்பர் 21வரை கால அவகாசம் வழங்குவது என்றும் அதற்குள் தீர்வு கிடைக்காவிடின் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் இலங்கை மின்சார சபை சுதந்திர சேவை சங்கத்தின் செயலாளர் பிரபாத் பிரியந்த தெரிவித்தார்.

மின்சார சபை தொழிற்சங்கத்தினர் சட்டப்படி வேலை நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

புதிய மின்சாரசபை சட்டத்தின் பிரகாரம் மின்சார சபையை 4 தனியார் நிறுவனங்களுக்கு வேறுப்படுத்த ஆளும்தரப்பு உத்தேசித்துள்ளது. இதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க போவதில்லை.

மின்கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் 21 கோரிக்கையை மின்சாரத்துறை அமைச்சின் செயலாளரிடம் முன்வைத்துள்ளோம். இதுவரையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மின்சாரத்துறை கட்டமைப்பில் ஆளும்தரப்பு எடுக்கும் தன்னிச்சையான தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று நள்ளிரவு (நேற்று) முதல் சட்டப்படி வேலையில் ஈடுபட தீர்மானித்துள்ளோம். எமது இந்த தீர்மானத்துக்கு ஆளுங்கட்சியின் தொழிற்சங்கங்களை தவிர்த்து ஏனைய தொழிற்சங்கத்தினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவுள்ளார்கள்.

செப்டெம்பர் 16 ஆம் திகதி வரை சட்டப்படி வேலையில் ஈடுபடுவோம். அதற்கு பின்னர் சட்டப்படி வேலையில் இரண்டாம் கட்ட நடவடிக்கையில் ஈடுபடுவோம். இக்காலப்பகுதியில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு சாதகமான தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்னர் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம். இந்த தீர்மானத்தை மின்சாரத்துறை அமைச்சுக்கும், தொழில் அமைச்சுக்கும் எழுத்துமூலமாக அறிவித்துள்ளோம் என்றார்.

# பிரதமரின் வாழ்த்து

இலங்கையிலும் உலகெங்கிலும் வாழும் இஸ்லாமிய அன்பர்கள், முஹம்மது நபிகள் (ஸல்) நாயகம் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடுவதை முன்னிட்டு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மீலாதுன் நபி தினத்தை முன்னிட்டு பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நபிகள் நாயகம் அவர்களின் போதனைகள் வெறும் மதக் கோட்பாடுகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டவை அல்ல, மாறாக, முழு மனிதகுலத்திற்கும் நன்மையளிக்கும் உலகளாவிய மனிதநேயக் கோட்பாடுகளாகும். குறிப்பாக, சமூக நீதி, சமத்துவம், ஒடுக்கப்பட்டவர்கள் மீதான இரக்கம் மற்றும் ஆட்சியாளர்களின் பொறுப்புக்கூறல் பற்றிய அவர்களின் போதனைகள் இன்றைய சமூகத்திற்கு முன்னெப்போதையும் விட மிகவும் பொருத்தமானவையாகும்.

அக்காலத்தில் சமூகத்தில் நிலவிய அநீதியும் ஊழலும் நிறைந்த அமைப்புகளுக்கு எதிராக எழுந்த ஒரு புரட்சிகரமான கொள்கையாகவே அவர்களின் செய்தி அமைந்திருந்தது. மேலும், அது ஒரு மனிதன் மற்றொரு மனிதனைச் சுரண்டாத, அனைவரும் கண்ணியத்துடன் வாழக்கூடிய ஒரு சமூகத்தைக் கட்டமைப்பதற்கான உன்னதமான நோக்கத்தைக் கொண்டிருந்தது.

ஒரு நாடாக நாம் புதிய சமூக மாற்றத்தை எதிர்பார்க்கும் இந்தத் தருணத்தில், ஊழலும் ஏற்றத்தாழ்வும் அற்ற நீதியான ஆட்சி பற்றிய அந்தப் போதனைகள் நமக்கு மிகுந்த வலிமையையும் உத்வேகத்தையும் தருகின்றன.

இலங்கையின் முன்னேற்றத்திற்கு முஸ்லிம் சமூகம் ஆற்றியுள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க பங்களிப்பை நான் மிகுந்த மதிப்புடன் நினைவுகூர்கிறேன். இந்த உன்னதமான போதனைகளை முன்மாதிரியாகக் கொண்டு, அனைத்து மக்களுக்கும் நீதி கிடைக்கப்பெறும், மனிதநேயமும் செழிப்பும் மிக்கதோர் தேசத்தைக் கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன். அனைவருக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த மீலாதுன்-நபி தினமாக அமையட்டும்!



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## வார்த்தைகளால் மட்டுல்ல திட்டங்களால் தீர்வு தேவை

**அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித்த ஹேரத் புரட்டாதி 2 செவ்வாய்க்கிழமை கொழும்பில் பன்னாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பின்போது வெளியிட்ட கருத்துகள் பலருக்கும் புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தன. வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் உறுதியையும், பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தனது ஆளும்தரப்பின் நோக்கத்தையும் அவர் வலியுறுத்தினார்.**

**இது சாமான்யமாக எடுத்துக்கொள்ளக்கூடியது அல்ல. ஏனெனில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ளது. எனவே, இலங்கை ஆளும்தரப்பின் ஒவ்வொரு கருத்தும் பன்னாட்டு சமூகத்தின் கூர்மையான கவனத்துக்குள் செல்லும். இந்தச் சூழ்நிலையில், அமைச்சர் விஜித்த ஹேரத்தின் வாக்குறுதிகள் சற்று அதிக கவனத்தை ஈர்த்துள்ளன.**

**ஆனால் கேள்வி எழுவது, இவை வெறும் வார்த்தைகளாக மட்டுமே மாறுமா? என்பது குறித்துத்தான்.**

**தமிழர் சமூகமும், பன்னாட்டு சமூகமும் ஏற்கெனவே இலங்கையின் பல்வேறு ஆளும்தரப்புகளிடமிருந்து இதே போன்ற வாக்குறுதிகளை கேட்டுவிட்டது. ''பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உறுதி,'' ''அமைதி மற்றும் நல்லிணக்கம்,'' ''சுயாதீன அமைப்புகள்,'' ''பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் ஒற்றுமை'' என பலமுறை கூறப்பட்ட வாக்குறுதிகள் நடைமுறையில் நிறைவேற்றப்பட்டதேயில்லை. இது அனைவருக்கும் தெரிந்த வெளிப்படை உண்மை.**

**பொதுவாக, மனித உரிமைச் சிக்கல்கள் குறித்தும், காணாமல்போனோர் பிரச்சினை குறித்தும், அரசியல் கைதிகள் விடுதலை குறித்தும், காவல்துறை மற்றும் நில உரிமைகள் குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்தும் ஆளும்தரப்புகள் சர்வதேச மேடைகளில் ''நாம் உறுதியாக இருக்கிறோம்'' என்று வலியுறுத்தி வந்தனர். ஆனால் நடைமுறையில் ஒரு தெளிவான திட்டம் அல்லது வழி வரைபடம் (road map) எதுவும் இருக்கவில்லை. இதன் விளைவாக, தமிழ் சமூகமும் பன்னாட்டு சமூகமும் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டனர்.**

**அமைச்சர் விஜித்த ஹேரத் தனது உரையில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்குவதற்கான நகர்வுகள், நிகழ்நிலைக்காப்புச் சட்ட மறுசீரமைப்பு, ஊழல் ஒழிப்பு செயற்திட்டம், காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், சுயாதீன வழக்குத்தொடுனர் அலுவலகம் போன்றவை பற்றியும் குறிப்பிட்டார். இவை நிச்சயமாக கவனிக்கத்தக்க முன்னேற்றங்களாகத் தோன்றினாலும், தமிழர் சமூகத்தின் அடிப்படை அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகளுக்கு நேரடி பதிலளிக்கக்கூடிய திட்டங்களல்ல.**

**வட, கிழக்கு மாகாணங்களில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மிகத் தெளிவானவை. காணாமல்போன அன்புக்குரியோரின் உண்மையை அறிதல், அரசியல் கைதிகளின் விடுதலை, நில உரிமைகள், பாதுகாப்புக் கட்டுப்பாடுகள், இராணுவ முகாம்களின் நில ஆக்கிரமிப்புப் பிரச்சினை, காவல்துறை அதிகாரங்கள் உட்பட மாகாண சபை அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல், கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் தொடர்பான சமமான வாய்ப்புகள், ஆகிய விடயங்களில் அவர்கள் நீண்ட காலமாகவே தீர்வுகளை எதிர்பார்க்கிறார்கள்.**

**இவற்றில் எதற்கு, எவ்வாறு, எந்தக் காலக் கட்டத்தில் தீர்வுகளை ஆளும்தரப்பு வழங்கப்போகிறது என்பதற்கான வழிகாட்டும் வரைபடம் இல்லையெனில், எந்தவொரு வாக்குறுதியும் வெறும் ''வார்த்தைச் சொற்பொழிவாகவே'' கருதப்படும்.**

**இலங்கை இப்போதைய சூழ்நிலையில் பன்னாட்டு அரங்கில் நம்பிக்கையை வெல்லவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மனித உரிமைச் சிக்கல்கள் காரணமாக நீண்டகாலமாக இலங்கை மீது பன்னாட்டு அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு பன்னாட்டு உதவி அவசியமான நிலையில், மனித உரிமைச் சவால்களில் நேர்மையான முன்னேற்றம் காட்டுவது ஆளும்தரப்பின் கடமையாகிறது.**

**எனவே, அமைச்சர் விஜித்த ஹேரத்தின் கருத்துகள் பன்னாட்டு சமூகத்துக்கு வழங்கப்பட்ட சத்தமில்லா ''சாந்த வாக்குறுதியாக'' மட்டுமே இருக்கக் கூடாது. அவை ஒரு விவரமான செயல் திட்டமாக மாறவேண்டும். இல்லையெனில், பன்னாட்டுச் சமூகமும் தமிழரும் இதை ஒரு ''பழைய நாடகத்தின் புதிய அத்தியாயம்'' எனவே கருதுவர்.**

**அமைச்சர் தனது உரையில் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உறுதி தெரிவித்திருந்தாலும், அந்தத் தீர்வுகளை வடிவமைக்கும் பணியில் தமிழர் அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புகளும், குடிமக்களும் பங்கு பெறவேண்டும். அவர்களுடனான நேரடி கலந்துரையாடலே உண்மையான தீர்வுக்கு வழிவகுக்கும். மேலிருந்து மட்டுமே தீர்வுகள் திணிக்கப்படும் நடைமுறைகள் கடந்த காலத்தில் தோல்வியடைந்துள்ளன.**

**அயலுறவுத்துறை அமைச்சரின் இந்த வாக்குறுதிகள் புதிய நம்பிக்கை ஒன்றை விதைக்க முற்பட்டாலும், தமிழர்களுக்கிருக்கும் அனுபவம் மற்றும் பட்டறிவு காரணமாக வாக்குறுதி மட்டும் போதாது என்பதே அவர்களின் திடமான முடிவு. திட்டம் தேவை, காலக்கட்டங்கள் தேவை, நடைமுறைப்படுத்தும் துணிவு தேவை. அதனுடன் தமிழர் சமூகத்துடன் உண்மையான உரையாடலும் தேவை. எனவே ஆளும்தரப்பு வெறும் வார்த்தைகளில் உறுதி மொழி வழங்குவதை விட்டுவிட்டு, அதற்கான திட்டமுன்மொழிவை வைக்கவேண்டும். அது முடியாது என்றால் இந்த வாக்குறுதிகளில் நம்பிக்கை கொள்வதற்கு எதுவுமேயில்லை.**

# மனித உரிமைகள் மீறல்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை சர்வதேசம் ஏற்கின்றது

### இப்படிச் சொல்கிறார் அமைச்சரவை பேச்சாளர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மீளாவுக் கூட்டத்தொடர் ஆரம்பமாக முன்னர் அல்லது அதற்கிடைப்பட்ட காலப்பகுதியில், இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ளபிரேரணை குறித்தநிலைப்பாட்டை அயலுறவு அமைச்சு அறிவிக்கும். கடந்த காலங்களை விட தற்போது இலங்கையில் ஜனநாயக மீறல்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளமையை சர்வதேசமு; ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டுகளில் எமது நாட்டில் காணப்பட்ட ஜனநாயக மீறல்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற நிலைமைதற்போதுகனிசமானளவுமாற்றமடைந்துள்ளதாக சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும்அந்தஅடிப்படையிலேயேஅறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று அவர்கள் தரப்பில் சில கண்காணிப்புக்களும் காணப்படுகின்றன. அரசாங்கமும், வெளிவிவகார அமைச்சும் இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளன. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாக முன்னர் அல்லது அதற்கிடையில் இது தொடர்பில் ஆளும்தரப்பு அதன் நிலைப்பாட்டை அறிவிக்கும்.

பயங்கரவாதத் தடை சட்டம் நிச்சயம் நீக்கப்பட்டு, புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். எவ்வாறிருப்பினும் அதுவரை சில சட்ட நடவடிக்கைகளுக்காக பயங்கரவாதத் தடை சட்டத்தை பயன்படுத்த வேண்டியேற்பட்டுள்ளது. புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான கால அவகாசம் குறித்து இப்போது கூற முடியாது. விரைவில் அதனையும் அறிவிப்போம் என்றார்.

# தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு ஆளும்தரப்பில் இடம்தரவேண்டும்

### சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தமை மகிழ்ச்சிக்குரியது. இந்த ஆணையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு ஆளும்தரப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பிலான கலந்துரையாடலில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல் வாதிகள் அம்மக்களின் அடிப்படை பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியே அரசியல் செய்தார்கள். செல்வநாயகம் மற்றும் பொன்னம்பலம் போன்றவர்கள் வாராந்த அரசியலில் ஈடுபட்டார்கள். வடக்குக்கு சென்று ஒன்றை குறிப்பிட்டுவிட்டு கொழும்புக்கு வந்து பிறிதொன்றை குறிப்பிட்டார்கள்.

30 வருடகால போர் நாட்டில் இழப்புக்களையும் வேதனைகளையும் மாத்திரமே மிகுதியாக்கின. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் இன்றும் அதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இந்நிலைமை மாற்றம் பெற வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தமை மகிழ்ச்சிக்குரியது. இந்த ஆணையை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். வடக்கு மற்றும் கிழக்குக்கான அபிவிருத்திகளை ஆளும்தரப்பு விரிவுப்படுத்த வேண்டும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு ஆளும்தரப்பு முன்னுரிமையளிக்க வேண்டும். பிரதி சபாநாயகராக முஸ்லிம் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டமை வரவேற்றக்கத்தது. சிறந்த முற்போக்கான தீர்மானங்களுக்கு நாங்களும் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார்.

# தென்னிந்திய அரசியலாளர்களுக்காக அநுர கச்சதீவிற்கு செல்லவில்லையாம்

*தென்னிந்நிய அரசியல்வாதிகளுக்காக அரசுத் தலைவர் அநுரகுமார திகச்சதீவு செல்லவில்லை. அது எமக்கு உரித்தான நிலப்பரப்பாகும். எனவே கச்சதீவு தொடர்பில் நாம் மீண்டும் பேசவேண்டிய தேவை இல்லை. அரச தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதியால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அங்கு செல்ல முடியும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.*

*கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.*

*அபிவிருத்தி திட்டங்கள் சிலவற்றைத் தொடக்கி வைப்பதற்காகவே அரசுத் தலைவர் அநுரகுமார யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தார். யாழ்ப்பாணத்தில் மாத்திரமின்றி கிழக்கு மற்றும் ஏனைய மாகாணங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வுகளில் எதிர்வரும் மாதங்களில் அரசுத் தலைவர் பங்கேற்கவுள்ளார். அரசுத் தலைவரின் கச்சதீவுப் பயணம் அதிவிசேடமானதல்ல.*

*தென்னிந்தியாவில் அவ்வப்போது அரசியல் தலைவர்கள் கச்சதீவு குறித்து பேசுவது வழமையானதொரு விடயமாகும். அவர்கள் தமக்காக வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு கச்சதீவு தொடர்பிலோ அல்லது வடக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலோ வாக்குறுதிகளை வழங்குவர். எனவே கச்சதீவு தொடர்பில் நாம் மீண்டும் பேச வேண்டிய தேவை இல்லை. கச்சதீவு எமக்கு உரித்தான நிலப்பரப்பாகும். அதில் சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து, அப்பகுதியை அபிவிருத்தி செய்வது குறித்தும் கூடுதல் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.*

*அந்த வகையில் தென்னிந்தியாவில் கூறப்பட்ட கருத்துக்கும் அரசுத் தலைவரின் கச்சதீவு பயணத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அரச தலைவர் என்ற ரீதியில் நாட்டிலுள்ள சகல பிரதேசங்களுக்கும் ஜனாதிபதியால் செல்ல முடியும். அவ்வாறு செல்லும் போது மக்களுடன் கலந்துரையாடி, அப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பில் நேரடியாக அவதானம் செலுத்தினால் அது சிறந்ததாகும். நாம் அறிந்த வகையில் இதுவரையில் அரச தலைவரொருவர் கச்சதீவுக்குச் செல்லவில்லை. அந்த வகையில் அரசுத் தலைவரின் இந்த விஜயம் மிக முக்கியத்துவமுடையதாகும்.*




# அநுரவின் அஸ்திரம்

**என். சத்திய மூர்த்தி**

இந்த கிழமை யாழ்பாணத்திற்குப் பயணம் செய்த அரசுத் தலைவர் அநுரகுமார, அதனை தான் தலைமைத்துவம் நல்கும் ஜே.வி.பி – என்.பி.பி. கூட்டணியின் மாகாண சபை தேர்தலுக்கான முதல்கட்டப் பரப்புரையாகவே மாற்றிவிட்டார். அவர் தொடக்கி வைத்த பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் ஆகட்டும், அல்லது வடக்கில் இன்னமும் வன்முறை தொடருகிறது என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் தவறாக பரப்புரை செய்கிறார்கள் என்ற கருத்து ஆகட்டும், இவை அனைத்துமே தமிழர் வாக்குகளைக் குறிவைத்துச் செய்வதாகவே கருத இடமிருக்கிறது. என்றாலும், யாழ்பாணத்தில் கடவுச் சீட்டு அலுவலகத்தை அவர் தொடக்கி வைத்தது, உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

ஆளும்தரப்பை பொறுத்தவரையில், அதற்குத் தமிழர்களின் தொடர் அங்கீகாரம் தேவைபடுகிறது. கடந்த வருட நாடாளுமன்ற தேர்தலில் வடமாகாணத்தில், அதிலும் குறிப்பாக யாழ்பாண தேர்தல் மாவட்டத்தில் அவர்கள் அடைந்த 'இமாலய வெற்றி', அவர்களிடையே ஒரு தவறான எண்ணவோட்டத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து இந்த ஆண்டு, உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் அவர்களை வானத்தில் இருந்து பூமிக்கு கொண்டு வந்தது.

தற்போதைய ஜேவிபியின் திட்டமே மாகாண சபை தேர்தலில் நாடாளுமன்ற தேர்தல் அளவிற்கு சாதிக்க வேண்டும். குறிப்பாக, தமிழர்களின் கலாசார தலைநகர் என்று தம்பட்டம் அடிக்கப்படும் யாழ்பாணம் நகரை உள்ளடக்கிய வட மாகாண சபையில் அவர்கள் ஆட்சி அமைக்க முடிந்தால்.... அதுவே, தென்னிலங்கையிலும் தங்களது இனத்திற்கான வெற்றியாகவும் அவர்கள் பிரகடனப்படுத்திக்கொள்வார்கள். அப்போது அநுர தற்போது கூறும் தென்னிலங்கை பேரினவாத வாக்காளர்களிடமும் தாங்கள் இழந்த செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்தி கொள்ளலாம்.

## செயல்வடிவில் சிக்கல்

கடந்து ஓராண்டு சாதனையாக அநுர தலைமைக்கு சொல்லிக்கொள்ளும் அளவிற்கு எதுவும் இல்லை. குறிப்பாக, விலைவாசி, வேலை வாய்ப்பு மற்றும் குடும்ப வருமானம் குறித்தெல்லாம் அவர்கள் மக்களுக்கு கொடுத்த நம்பிக்கை, வாக்குறுதி எல்லாம் பறந்தே போய்விட்டது. அதேசமயம், முந்தைய அரச தலைவர்களின் ஊழல் குறித்தெல்லாம் அதிரடி விசாரணையும் கைது நடவடிக்கைகளையும் மேற்கொண்டதன் மூலம், ஏதோ ஒரு விதத்தில் அவர்கள் மாறுதலைச் செய்ய விருமப்புகிறார்கள் என்று தென்னிலங்கையை நம்பவைக்க முயன்றார்கள்.

ஆனால், முன்னாள் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கைது நடவடிக்கையைத் தொடர்ந்து தென்னிலங்கை மக்களின் மனநிலையே மாறிவிட்டது போன்ற தோற்றம் எழுந்தது. தென்னிலங்கையில் உள்ள எதிர்கட்சி அரசியல்வாதிகள் ஓரணியில் திரளுவது குறித்து முயற்சி மேற்கொண்டாலும், அது செயல்வடிவம் பெறுவதில் சிக்கல்கள் உள்ளன என்பதை ஜே.வி.பி. தலைமை நன்றாகவே ஊகித்திருந்தது.

அதற்காக, அடுத்த சுற்று தேர்தல்களில் அவை ஓரணியில் திரளாது என்று யாரும் கற்பனை செய்ய வேண்டியதில்லை. இன்னும் சொல்லப்போனால், தென்னிலங்கை எதிர்கட்சிகளின் பிரச்சினையே, தலைமை மற்றும் தலைமைத்துவம் குறித்ததுத்தான். எங்கே, ரணிலுக்கு முழு ஆதரவு அளித்தால், அவர் மீண்டும் தென்னிலங்கை அரசியலில் நடுநாயக இடத்தை மீண்டும் கைப்பற்றி, தன்னை இல்லதாக்கி விடுவாரோ என்று சஜித் பிரேமதாசாவிற்கு கவலை.

இதனை உணர்ந்து தானோ என்னவோ, ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி, தனது தேசிய மாநாட்டை மறு திகதி அறிவிக்காமல் ஒத்தி வைத்துள்ளது. இடைப்பட்ட காலத்தில், சஜித் அல்லது பிறரது தலைமையில் ஓரணியில் திரள வாய்ப்பிருந்தால், அதற்கு ரணிலோ, அவரது கட்சியோ குறுக்கே நிற்காது என்ற செய்தியை தெளிவாக அறிவிப்பதற்கே இந்த முடிவு என்றே கருத வேண்டும்.

இதில் மொட்டு கட்சியின் நிலைபாடு தனியாக இருக்கலாம். அவ்வாறானாலும், அவர்கள் அதிகமாகப் பெறும் ஒவ்வொரு வாக்கும் ஜேவிபி அணியின் வாக்காகவே இருக்க முடியும் என்பதே உண்மை. பச்சையாகச் சொல்லப்போனால், கடந்த அரசுத் தலைவர் தேர்தலில் அநுர பெற்ற 42 சதவீத வாக்குகளில் சுமார் 40 சதவீத வாக்குகள் மஹிந்த ராஜபக்சவின் முந்தைய வாக்குகள். அவற்றை மீண்டும் கைப்பற்றவே நமால் ராஜபக்ச தகிடுதாளம் செய்யத் தொடங்கி உள்ளார்.

## காய் நகர்த்தல்

சரி, இதற்கும் அநுரவின் யாழ்பாண பயணத்திற்கும் தொடர்பு என்ன? அண்மையில், ரணிலின் கைது நடவடிக்கைக்கு எதிராக தென்னிலங்கை எதிர்கட்சிகள் ஓரணியில் நின்றபோது, தமிழர் தரப்பில் இருந்து எந்தவொரு முக்கிய கட்சியோ, அணியோ அதில் பங்கு பெறவில்லை. அவர்களில் சிலர், இனப்போர் முடிந்த காலத்திற்கு பின்னரும்கூட, ரணில் முதலில் பிரதமர், பின்னர் அரசுத் தலைவர் என்றெல்லாம் பதவி வகித்த போதும் இனப்பிரச்சினை குறித்து நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கவில்லை, என்று கொளுத்திப் போட்டார்கள்.

உண்மை என்னவோ, அடுத்து நடக்கவிருக்கும் மாகாண சபை தேர்தல்களில், குறிப்பாக வட மாகாணத்தில், தற்போதைய தென்னிலங்கை எதிர்கட்சிகள் ஒரு பொருட்டல்ல. அவர்களுடன் தற்போது சேர்ந்து பயணிக்க நேர்ந்தால், அதன் காரணமாக மாகாண சபை தேர்தலில் சில-பல ஆசனங்களை தானம் செய்ய வேண்டிவரும்.

என்றாலும், அதனை தொடர்ந்து வரும் அரசுத் தலைவர் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில், தமிழ் அரசு கட்சி உள்ளிட்ட முக்கிய தமிழர் தரப்பு அணிகள், தென்னிலங்கை எதிரணிகளுடன் ஏதாவது விதத்தில் அணி சேர்ந்து கொள்ளும். தற்போதைய அநுரவின் அரசியல் காய் நகர்த்தல் என்பதே, மாகாண சபை தேர்தலில், தமிழர் தரப்பு கட்சிகளை உண்டு - இல்லை என்று பண்ணிவிடுவதுதான். அதனை விட்டால், அவர்களுக்கு அடுத்த வாய்ப்பு துர்பலமே.

இன்னும் சொல்லப்போனல், இதற்கு வழி செய்யும் விதமாக, அரசு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபை தேர்தல்களை முன்னமே நடத்தி, அவற்றில் வெற்றி பெற்றால், அதனை தென்னிலங்கையில் பரப்புரை விடயமாக முன்னெடுக்கலாம். அவ்வாறு இல்லாமல், ஜே.வி.பி, வடக்கு-கிழக்கு தேர்தல்களில் படுதோல்வி அடைந்தாலும், அது கட்சித் தலைமை ஜனநாயகத்தின் மீது வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடே என்று சர்வதேசத்திடம் மார்தட்டிக் கொள்ளலாம்.

## பேரினவாதிகள் பட்டம்

இந்தத் தேர்தல் உத்தி ஒருபுறமிருக்க, தென்னிலங்கை பேரினவாதிகள் என்று அநுர கூறும்போது, அவர் குறிப்பாக மொட்டு கட்சியையும் ராஜபச்சக்களையுமே குறிவைத்து பேசுகிறார் என்பது புரிகிறது. அவரது கவலை அவருக்கு. எப்போது தமிழ் மக்கள் ராஜபக்சக்களை தங்களது பரம எதிரிகளாக கருதுகிறார்களோ, அப்போதே அவர்களை தங்கள் பக்கம் இழுத்து விடலாம் என்று கணக்குப்போட்டு செயல்படுகிறார் என்பது புலப்படுகிறது.

ஆனால், இனப்போர் முடிவுற்று, விடுதலை புலிகள் அமைப்பு இல்லாமல் ஆன பிறகே ராஜபக்சக்கள் மீது பேரினவாதிகள் என்று தமிழர்கள் முற்றும் முடிவுமாக முத்திரை குத்தினார்கள். அதுவரை அந்த பட்டம் ஜே.வி.பி. அணியினருக்கே பொருந்தியிருந்தது. தற்போது, தமிழர் வாக்குகளை கவரும் விதமாக, அந்தப் பட்டத்தை மட்டும் மொட்டு கட்சியினருக்கு அவசர அவசரமாகத் தாரை வார்க்கும் செயலையே அநுர மேற்கொண்டுள்ளார்.

ஆனால், இதனால் மட்டுமே, தமிழர் வாக்குகளை அவரால் பெறமுடியுமா? முடியாது என்று சொல்ல முடியாத நிலையிலேயே தமிழர் அரசியல் இன்னமும் அல்லாடிக் கொண்டிருக்கிறது. நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் கட்சிகளை தோல்வி அடையச் செய்து விட்டோமே என்ற பச்சாதாபத்தில் மட்டுமே வட மாகாண மக்கள், இருப்பதில் நல்லது என்று தமிழ் அரசு கட்சிக்கு வாக்கு அளித்தனர்.

ஆனால், அந்த மக்களின் எதிர்பார்ப்பை இன்னமும் எள்ளி நகையாடும் வகையிலேயே தமிழ் அரசு உள்ளிட்ட கட்சிகள் நடந்து கொண்டு வருகின்றன. தமிழ் தேசியம் மற்றும் போர் குற்றங்கள் ஆகிய பிரச்சினை மூலமே தங்களை நிலைநிறுத்திக்கொள்ள விழையும் இந்தக் கட்சிகள், அந்தப் பிரச்சினை குறித்து ஒருமித்த கருத்தை இன்னமும் உருவாக்கவில்லை.

இதற்கான தற்போதைய உதாரணம் இதுதான், அடுத்த கிழமை தொடங்க இருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தை முன்னிறுத்தி, தமிழ் கட்சிகள் தனித்தனியாக குறைந்த பட்சம் மூன்று கடிதங்களை அனுப்பி உள்ளார்கள். அவற்றின் சாராம்சம் ஒன்றாக இருந்தாலும், குறிப்பிட்ட கோரிக்கைகள் ஒன்றிற்கு ஒன்று வேறுபட்டு நிற்கின்றன. இந்தக் கடிதங்களைப் படிக்கும் மனித உரிமைகள் பேரவை அதிகாரிகள் முடியை பிய்த்துக் கொள்வார்கள். அவர்களின் தலைவரான வோல்கர் டர்க், பாவம், இப்போதே அவருக்கு தலையில் ஒரு முடிகூட இல்லை.

## நகைப்பிற்கு இடம்

இவை எல்லாம் போதாது என்று அரசுத் தலைவர் அநுர, யாழ்பாணப் பயணத்தின்போது, ஒரு 'ஸ்டன்ட்' அடித்தார். யாரும் எதிர்பாராத விதத்தில், அவர் கடற்படையின் 'ஸ்பீட் போட்' மூலம் கச்சதீவிற்கு தடாலடியாகச் சென்றார். அதன் மூலம் வட மாகாண மீனவ சமுதாயத்தின் வாக்குகளை கவருவது அவரது எண்ணமாக இருக்கலாம்.

ஆனால், அநுரவின் முயற்சி, அத்தைக்கு மீசை முளைத்தால் கதைதான். வட மாகாண மீனவர்களுக்கும் அவர்களின் தொப்புள் கொடி உறவான தமிழ் நாடு மீனவர்களுக்கும் இடையே தொழில் ரீதியாக பிரச்சினைகள் உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், அவர்கள் அந்தத் தகராறை கச்சதீவு பிரச்சினையுடன் இணைத்துப் பார்ப்பது இல்லை. இன்னும் சொல்லப்போனால், இரு நாட்டு மீனவர்களுமே கச்சதீவு, மீனவர் தகராறுகளுக்கான தீர்வு என்று கருதியது இல்லை. தமிழ் நாட்டு அரசியல் தலைமைகள் மட்டுமே அவ்வாறு கருதி அவ்வப்போது அறிக்கைகள் வெளியிட்டு வந்துள்ளன.

இதில் நகைப்பிற்கு இடமான விடயம் என்னவென்றால், அநுரவின் கச்சதீவுக்குப் பயணம் செய்தது, தமிழ் நாட்டில் நடிகர் விஜய், தான் தொடங்கி உள்ள தமிழக வெற்றி கழகம் கட்சியின் இரண்டாவது மாநில மாநாட்டில் பேசும்போது தெரிவித்த கருத்திற்கு எதிர்வினை ஆற்றும் முகமாகவே என்று கருதப்பட்டது. நடிகர் விஜயின் கட்சி இன்னமும் தமிழ் நாட்டில் வேரூன்றவில்லை. இதுவரை ஒரு தேர்தலையும் சந்தித்தது இல்லை.

இதுகூட அறியாமல், விஜய் கட்சியின் வெற்றி-தோல்வி குறித்த தெளிவான எண்ணம் எதுவுமே இல்லாமல், அரசுத் தலைவர் அநுரவே இவ்வாறு அரசியல் செய்வது, தமிழ் நாட்டு மக்கள் குறித்த அவரது ஆலோசனைக் குழுவினரின் அறிவின்மையையே படம்போட்டுக் காட்டி உள்ளது. இதற்கிடையில், விஜய் மதுரைக் கூட்டத்தில் பேசிய அடுத்த தினங்களிலேயே, இலங்கை அயலுறவுத் துறை அமைச்சர் விஜித ஹேரத், கச்சதீவு இலங்கையின் ஒரு பகுதியே என்பது குறித்து எந்தவித சந்தேகமும் வேண்டாம் என்று நாடாளுமன்றத்திலேயே உறுதி அளித்திருந்தார்.

அப்படியானால், யாழ்பாணத்தில் பேசியபோது நாட்டின் இறையாண்மைக்கும் தீவுகள் உள்ளிட்ட அரசியல் எல்லைகளுக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்பட தான் விடமாட்டேன் என்று அரசுத் தலைவர் அநுர சூளுரைத்தது யாரை மனதில் வைத்துக் கூறப்பட்டது? அல்லது, யாரை ஏமாற்றக் கூறப்பட்டது? அல்லது அவலை நினைத்துக் கொண்டு உரலை மீண்டும் ஒரு முறை இடித்தாரா?

அநுரவின் யாழ்பாணப் பயணம் என்ற அஸ்திரம், முனை மழுங்கியதா? அல்லது முனை கூராக உள்ளதா? எது எப்படியோ, அந்த அஸ்திரம் அவர் குறிவைக்கும் இலக்கை சென்றடையுமா?

காலைக்கதிர் Kalaikkathir

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளோம்.

நடுநிலையான மற்றும் வெளிப்படைத்தன்மையுடன், சர்வதேச தரத்துடன் பரிசோதனை மற்றும் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நீதியமைச்சு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். நீதி மற்றும் உண்மையை கண்டறிவது ஆளும்தரப்பின் பிரதான கடப்பாடாகும். தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின் கடந்த கால சம்வங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும். குருக்கள்மடம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் பொதுமக்கள் அதனை எமக்கு வழங்க வேண்டும். வழங்கப்படும் தகவல் பாதுகாக்கப்படுவதுடன், தகவல் வழங்குபவரின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அகழ்வு பணிகள் தொடர்பில் வைத்திய அதிகாரிகள் உட்பட துறைசார் நிபுணர்கள் வழங்கும் பரிந்துரைக்கு அமைய எவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்று நீதிமன்றமே தீர்மானிக்கும். இங்கு நிதி பிரச்சினையில்லை. மனிதாபிமானம் தொடர்பில் பிரச்சினை காணப்படுகிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சகல மனிதப்புதைகுழிகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகிறோம். ஐக்கிய நாடுகள் சபை, தென் ஆபிரிக்கா, சுவிஸ்லாந்து போன்ற நாடுகள் உட்பட சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் இந்நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

இம்மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் போது இவ்விடயங்கள் பேசப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. நாட்டு மக்களுக்காக விசாரணைகளை மேற்கொள்கின்றோமே தவிர, சர்வதேச சமூகத்தை மகிழ்விப்பதற்காகவல்ல என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

நீதி மற்றும் நியாயத்தை நிலைநாட்டுவதற்கு இந்த ஒருவருட காலத்தில் பலவற்றை செய்துள்ளோம். ஐக்கிய நாடுகள் சபையையோ அல்லது சர்வதே சமூகத்தையோ திருப்திப்படுத்துவதற்காக இந்த விசாரணைகளை நாங்கள் மேற்கொள்ளவில்லை. எமது ஆளும்தரப்பின் பிரதான தரப்பான ஜேவிபியினர் 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகாலப்பகுதிகளில் இவ்வாறே பாதிக்கப்பட்டார்கள். காணாமலாக்கப்பட்டோருக்கு எமது ஆளும்தரப்பில் நீதி கிடைக்காவிடின், எந்த ஆளும்தரப்பில் நீதி கிடைக்கும்? சகலருக்கும் நீதி மற்றும் நியாயம் கிடைக்கும் வகையில் செயற்படுவோம். களுவாஞ்சிகுடி மற்றும் குருக்கள்மடம் மனித புதைகுழிகள் தொடர்பில் முறைப்பாடளிக்குமாறு பொதுக்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயம் நீதியை பெற்றுக்கொடுப்போம் என்றார்.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை கம்பஹா யக்கல பிரதேசத்தில் அமைந்துள்ள எமது கட்சிப் பணியிடத்திற்குப் பலவந்தமாக நுழைந்த ஆளும்தரப்பின் குண்டர்கள் குழு, பணி இடத்தில் தங்கி இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி, அந்த இடத்தை கைப்பற்றி இருக்கிறது. ஜேவிபியின் மஹிந்த ஜயசிங்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிகள் குழுவொன்று இந்தத் தாக்குதலில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கின்றனர். அதனால் இதுதொடர்பான சில தகவல்களை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள பொலிஸ் மா அதிபரின் பணியிடத்திற்கு வந்தோம்.

ஏனெனில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்று குறுகிய நேரத்துக்குள் பெருந்திரளான பொலிஸார் அந்த இடத்துக்கு வந்திருந்தனர். அப்படியானால் இந்தப் பொலிஸாரை இந்த இடத்துக்கு யார் அழைத்தார்கள் என்று நாங்கள் கேட்கிறோம். அதேநேரம் அங்கு வந்த பொலிஸார் செயற்பட்ட விதம் கேள்விக்குரியது. விசேட அதிரடிப்படை பஸ் வண்டி ஒன்றும் வந்திருந்தது. இவ்வளவு பெரிய நடவடிக்கை ஒன்றை சில மணி நேரத்துக்குள் மேற்கொள்ள பொலிஸாருக்கு எங்கிருந்து கட்டளை வந்தது? என கேள்விகள் எங்களிடம் இருக்கின்றது.

எமது இந்தக் கட்சிப் பணியிடத்தில் புத்தகங்கள், மடிக்கணணிகள் மற்றும் கட்சிக்குச் சொந்தமான பொருட்கள் பெருமளவில் இருந்தன. இந்தப் பொருட்களை நாங்கள் பெற்றுக்கொள்ள பொலி ஸாரிடம் கேட்டபோது அதற்கு இடமளிக்க முடியாது என்றார்கள். இது இரண்டு கட்சிகளுக்கிடையிலான பிரச்சினை, அதனால் பொலிஸாருக்கு இதில் தலையிடமுடியாது என்றே அவர்கள் தொடர்ந்து தெரிவித்து வந்தனர். ஆனால் இந்த நடவடிக்கைக்கு அரச வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிரடிப்படை உள்ளிட்ட பெருமளவிலான பொலிஸார் வந்தார்கள். வீதித்தடைகள் கொண்டுவந்திருந்தனர். அப்படியானால் இதற்கு பணம் எங்கிருந்து வந்தது? இது அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் இல்லையா? அதனால்தான் இதுதொடர்பான தகவல்களை வழங்குமாறு கோரி பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை கையளித்திருக்கிறோம்.

14 நாட்களுக்கு இது தொடர்பான தகவல்களை எங்களுக்கு பெற்றுத்தரும் என நாங்கள் நம்புகிறோம். அத்துடன் தனியாருக்கு உரித்தான உடமை ஒன்றுக்குள் பலவந்தமாக நுழைந்து அந்த உடமைகளை பலவந்தமாக கைப்பற்றும் நடவடிக்கை ஒன்றையே ஆளும்தரப்பு செய்திருக்கிறது. இவ்வாறான மோசமான நடவடிக்கைகளுக்கு மக்கள் இடமளிக்கக்கூடாது. இந்த ஆளும்தரப்பு தற்போது அதிகாரமோத்திலே இருக்கிறது. அதனால் அவர்கள் நினைத்ததைச் செய்கிறார்கள். சட்டத்தைத் துஸ்பியோகம் செய்வது மாத்திரமின்றி, மக்களின் உடமைகளையும் அபகரிக்கின்றனர். இவ்வாறே மூதூர், மன்னார் போன்ற பிரதேசங்களில் மக்களின் காணிகளை அபகரித்துக்கொண்டு இந்தியாவுக்கு விற்பனை செய்ய பார்க்கின்றனர். இதற்கு இடமளிக்கக்கூடாது. அதனால் ஆளும்தரப்பின் இவ்வாறான தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றிணையுமாறு அனைவரையும் அழைக்கிறோம் என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ளது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை (2) கொழும்பில் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சில் சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளைச் சந்தித்த அமைச்சர் விஜித்த ஹேரத் மனித உரிமைகள்சார் விடயங்களில் ஆளும்தரப்பினால் முன்னெடுக்கப்பட்டுள்ள சமகால நகர்வுகள் குறித்தும், அவற்றில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

அதன்படி புதிய ஆளும்தரப்பு என்ற ரீதியில் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாறுபட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றின் மூலம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் அடையப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாகவும், அவற்றுக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதிலும், பொருளாதாரப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளின் ஊடாக நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதிலும் தாம் உறுதியாக இருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

அதேபோன்று பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை, நிகழ்நிலைக்காப்புச்சட்டத்தை மறுசீரமைப்பதற்கான நகர்வுகள், ஊழல் ஒழிப்பு செயற்திட்டம், க்ளீன் ஸ்ரீலங்கா செயற்திட்டம், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பன உள்ளடங்கலாக உள்ளகக் கட்டமைப்புக்களின் சமகால முன்னேற்றங்கள், சுயாதீன வழக்குத்தொடுனர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான தீர்மானம் உள்ளிட்ட நகர்வுகள் பற்றியும் அமைச்சர் விஜித்த ஹேரத் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



உ

முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## தெரிந்துகொள்ளுங்கள்!

சைவ சமயத்தின் முதற்பெரும் கடவுளாக்கிய
சிவனின் பெருமைக்குரிய வழிபாட்டிடங்களை இன்று
தெரிந்துகொள்வோம்!

சிறப்புமிகு சிவன் தலங்கள்
ராஜ கோபுரத்தை விட மூலவருக்கு உயர்ந்த விமானம்
உள்ள இடங்கள் :

1. தஞ்சை – பிரகதீஸ்வரர்
2. கங்கைகொண்டசோழபுரம் – பிரகதீஸ்வரர்
3. தாராசுரம் – ஐராவதேஸ்வரர்
4. திருபுவனம் – கம்பேஸ்வரர்

சிவனுக்குரிய விஷேச ஸ்தலங்கள் :
1. திருவேள்விக்குடி – கௌதுகாபந்தன க்ஷேத்ரம்
2. திருமங்கலகுடி – பஞ்சமங்கள க்ஷேத்ரம்
3. திருவையாறு – பஞ்ச நந்தி க்ஷேத்ரம்
4. திருவிடைமருதூர் – பஞ்சலிங்க க்ஷேத்ரம்
5. திருநீலக்குடி – பஞ்சவில்வாரண்ய க்ஷேத்ரம்
6. திருவிற்கோலம் – நைமிசாரண்ய க்ஷேத்ரம்
7. திருநெல்லிக்கா – பஞ்சாட்சரபுரம்
8. காஞ்சி – சத்தியவிரத க்ஷேத்ரம்
9. திருவல்லம் – வில்வாரண்யம்
10. திருகண்டியூர் – ஆதிவில்வாரண்யம்

சிவ பூஜைக்கு சிறந்த ஸ்தலங்கள் :
1. திருக்குற்றாலம் – திருவனந்தல் பூஜை
2. இராமேஸ்வரம் – காலை சந்தி பூஜை
3. திருவானைக்கா – உச்சிகால பூஜை
4. திருவாரூர் – சாயரக்ஷை பூஜை
5. மதுரை – இராக்கால பூஜை
6. சிதம்பரம் – அர்த்தஜாம பூஜை

காசிக்கு சமமான ஸ்தலங்கள் :
1. திருவெண்காடு.
2. திருவையாறு.
3. மயிலாடுதுறை.
4. திருவிடைமருதூர்.
5. திருச்சாய்காடு.
6. ஸ்ரீவாஞ்சியம்.
7. விருத்தாசலம்.
8. மதுரை.
9. திருப்புவனம்

தருமநூல்கள் பதினெட்டு :
கடவுளால் வகுத்தது
தருமத்தை பற்றி மட்டும்
உபதேசித்தது.
1. மனு
2. அத்த
3. விண்ட
4. வாசிட்டம
5. யமம
6. ஆபத்தமம
7. யாஞ்ஞ வற்கியம
8. பராசரம
9. அங்கீரசம
10. .உசனம
11. காத்தியாயனம
12. சம்பவர்த்தம
13. வியாசம
14. பிரகற்பத
15. சங்க்லிதம
16. சாதாதபம
17. கௌதம
18. தக்கம

பாரதத்தின் முக்தி ஸ்தலங்கள் :
1. காசி
2. காஞ்சி
3. மதுராபுரி
4. அரித்துவார்
5. உஜ்ஜையினி
6. அயோத்தி
7. துவாரகை

பாரதமே பரமசிவம் :
1. திருப்பரும்பதம் – தலை உச்சி
2. திருக்கேதாரம் – நெற்றி.
3. காசி – புருவநடு
4. பிரயாகை – நெஞ்சு
5. தில்லை – இதயம்
6. திருவாரூர் – மூலம்

முக்தி தரும் ஸ்தலங்கள் :
1. திருவாரூர் – பிறக்க முக்தி
2. காசி – இறக்க முக்தி
3. திருவண்ணாமலை – நினைக்க முக்தி
4. சிதம்பரம் – தரிசிக்க முக்தி
5. வேதாரண்யம் – தீர்த்தமாட முக்தி
6. மதுரை – கூற முக்தி
7. அவினாசி – கேட்க முக்தி

ஐந்து அற்புதங்கள் :

1. ஆவுடையார் கோவில் கொடுங்கை.
2. கடாரங்கொண்டான் மதில்
3. திருவீழிமிழலை வௌவ்வால் ஒட்டிமண்டபம்
4. தஞ்சாவூர் கோபுரம்
5. திருவலஞ்சுழி பலகணி

திவசம் சிறப்பு இடம் ஓபிதுர்கடன்
கொடுக்க சிறப்பு ஸ்தலம்ஊ :
1. காசி, கயா ஓவிஷ்னுபாதம் ஆலமரம்ஊ
2. திருவெண்காடு – ஆலமரத்தடி ஒருத்ரபாதம்ஊ
3. பத்ரிநாத், திருக்கோகர்ணம், பவானி, திலதர்ப்பணபுரி, செதிலப்பதி, ஓதசரதன்,ஜடாயுக்கு இராமன் லட்சுமனன் தர்ப்பணம் செய்தது.ஊ
4. இராமேஸ்வரம், துவாரகாபுரி, பூம்புகார், இடும்பாவனம், சங்குமுகேஸ்வரர்.

12 தமிழ் மாதங்களும், தெய்வங்களும் :
1. சித்திரை, ஆடி, ஐப்பசி, தை. – பிரம்மா, சித்திரை, ஐப்பசி பிறக்கும் காலம் விஷு ஓவிஷாவகன் – பிரம்மாஊ
2. வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி – விஷ்ணு. பிறக்கும்நேரம் விஷ்ணுபதி புண்ணிய காலம்.
3. ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி – சிவம். பிறக்கும் நேரம் ஷடசீதி ஓஷடாங்கன் – சிவன்ஊ
4. ஆடி மாதப் பிறப்பு தட்சிணாயன – புண்ணியகாலம் – சூரியன் தெற்கு பயனிப்பது.
5. தை மாதப் பிறப்பு உத்தராயண – புண்ணியகாலம் – சூரியன் வடக்கு நோக்கி பயனிப்பது.

பெரிய தேர்கள் உள்ள ஸ்தலங்கள் :

1. திருவாரூர்
2. திருநெல்வேலி
3. ஸ்ரீவில்லிபுதூர்
4. திருவண்ணாமலை
5. சிதம்பரம்
6. காஞ்சி
7. மதுரை

பன்னிரு ஜோதிர்லிங்க ஸ்தலங்கள் :

1. கேதாரம் – இமயம் ஓகேதாரேஸ்வரர்ஊ
2. சோமநாதம் – குஜராத் ஓசௌராஷ்டிரம்,சோமநாதேஸ்வரர்ஊ
3. மகாகாளேசம் – உஜ்ஜையினி ஓமகா காளேஸ்வரர்ஊ
4. விஸ்வநாதம் – காசி ஓவிஸ்வநாதேஸ்வரர்ஊ
5. வைத்தியநாதம் – ஓமகாராஷ்டிரம், வைத்தியனாதர்ஊ
6. பீமநாதம் – ஓமகாராஷ்டிரம், பீமநாதேஸ்வர்.ஊ
7. நாகேஸ்வரம் – ஓமகாராஷ்டிரம், தாருகாவனம், நாகேஸ்வர்ஊ
8. ஓங்காரேஸ்வரம் – மத்தியப்பிரதேசம் ஓஅமலேஸ்வரம், ஓங்காரேஸ்வரர்ஊ
9. த்ரயம்பகம் – ஓமகாராஷ்டிரம், கௌதம்ஊ திரயம்பகேஸ்வரர்.
10. குசுமேசம் – மகாராஷ்டிரம் குஸ்ருணேஸ்வர்.
11. மல்லிகார்ஜுனம் – ஓஆந்திரம்ஊ ஸ்ரீசைலம் – மல்லிகார்ஜுனர்.
12. இராமநாதம் – இராமேஸ்வரம் ஓதமிழ்நாடுஊ

சப்த விடங்கத் ஸ்தலங்கள் :
1. திருவாரூர் – வீதிவிடங்கர் – அஜபா நடனம்.
2. திருநள்ளாறு – நகரவிடங்கர் – உன்மத்த நடனம்.
3. நாகப்பட்டினம் – சுந்தரவிடங்கர் – வீசி நடனம்.
4. திருக்காறாயில் – ஆதிவிடங்கர் – குக்குட நடனம்.
5. திருக்கோளிலி – அவனிவிடங்கர் – பிருங்க நடனம்.
6. திருவாய்மூர் – நீல விடங்கர் – கமல நடனம்.
7. திருமறைக்காடு – புவனி விடங்கர் – ஹம்ஸபாத நடனம்.

பஞ்ச சபைத் ஸ்தலங்களும், பஞ்சாட்சர வடிவமும் :
1. திருநெல்வேலி – தாமிர சபை – ந
2. திருக்குற்றாலம் – சித்திர சபை – ம
3. திருவாலங்காடு – இரத்தின சபை – சி
4. திருத்தில்லை ஓசிதம்பரம்ஊ – பொற்சபை – வ
5. மதுரை – வெள்ளிசபை

திருச்சிற்றம்பலம்



# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்க்கவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேதமாச தெரிவிப்பு

நாட்டிலுள்ள உண்மையான பிரச்சினைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் கணித்துள்ளதன் பிரகாரம், இக்காலப் பிரிவுகளில் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைந்த மட்டத்திலயே அமையும் என வெளிக்கொணரப்பட்டுள்ளது. எனவே, அனைவரும் கைகோர்த்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

வேரஹெர ஸ்ரீ சித்தார்த்தராம புராண ராஜமஹா விஹாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தூபி மனை, கணினி மையத்துடன் கூடிய மூன்று மாடி அறநெறிப் பாடசாலைக்கான கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நமக்கு இன்னும் பல சவால்கள் காணப்படுகின்றன. இந்த விடயங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒரு நாடாக நாம் 2028 முதல், ஆண்டுதோறும் 5.5 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த வேண்டியுள்ளன. இவ்வாறு இந்த கடனை செலுத்துவதற்கு, 2025, 2026 மற்றும் 2027 ஆகிய மூன்று வருடங்களிலும் குறைந்தபட்சம் 5 சதவீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தை பேணிச் செல்லவேண்டும். உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் கணித்துள்ளதன் பிரகாரம், இக்காலப் பிரிவுகளில் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைந்த மட்டத்திலயே அமையும் என வெளிக்கொணரப்பட்டுள்ளது. எனவே, அனைவரும் கைகோர்த்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

இன, மத, சாதி, வர்க்கம் மற்றும் கட்சி பேதங்களை கடந்து சகல மக்களும் இந்தப் பயணத்தில் எந்தவித பாகுபாடும் இல்லாமல் இணைந்து கொள்ள வேண்டும். 5 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை பேணிச் செல்ல முடியாதவிடத்து 2022 இல் ஏற்பட்ட நிலைமை மீண்டும் 2028 இல் ஏற்படும். இதனால் மக்களுக்கும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டி ஏற்படும். அவ்வாறு நேர்ந்தால் மோசமான துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும். இந்த நிலையை அடைவதற்கான எதிர்பார்ப்பு யாரிடமும் இல்லை. ஆகையால், அனைவரும் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு இந்த இலக்குகளையும் சவால்களையும் கடக்க பாடுபட வேண்டும்.

இன்று நாட்டில் பொய்களும் ஏமாற்று வேலைகளுமே நடந்து வருகின்றன. மக்கள் 24 மணி நேரமும் பொய்களால் ஏமாற்றப்பட்டுள்ளனர். செய்திகளை உருவாக்கி, இல்லாதவற்றை சொல்லி, இருப்பவற்றை அழித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த ஏமாற்று நடவடிக்கையால் 220 இலட்சம் மக்களே ஏமாற்றப்பட்டு வருகின்றனர். பணம் கொடுத்து, கூலிக்கு ஆட்களை வேலைக்கு அமர்த்தி, பல்வேறு பொய்களைப் பரப்பி பொய்யை கோலோச்சி வருகின்றனர். பணம் செலவிட்டு உருவாக்கப்படும் போலிச் செய்திகள் பரவ இடமளிக்கக் கூடாது. ஏமாற்று, பொய் மற்றும் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தல்களை விடுத்து உண்மையான சவாலை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பொய்யான நடவடிக்கைகள் மூலம் நாட்டு மக்களை ஏமாற்றும் வேலையைச் செய்யக் கூடாது என்றார்.

## எதிர்க் கட்சித் தலைவர் வாழ்த்து

சிந்தனையுள்ள, கருணையுள்ள, நீதி மற்றும் நியாயத்தை உலகிற்குக் கற்பித்த மனிதாபிமான உணர்வுகளையும் மனித அன்பையும் உலக உயிரினங்களுக்காகப் பகிர்ந்தளித்த இறைதூதர் முஹம்மது நபி (ஸல்)அவர்களின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகின்றது. அதற்காக முழு உலக மக்களுக்கும் அதேபோல் இலங்கையில் வாழும் இஸ்லாமிய சகோதரத்துவத்திற்கும் வாழ்த்துச் செய்தியை அனுப்ப முடிந்தமை மகிழ்ச்சிக்குரியது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மீளாதுன் நபி தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச்செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இனம், மதம், குலம் அல்லது இருப்பு நிலை பார்க்காமல் ஒருவருக்கொருவர் மரியாதை, கருணை மற்றும் சேவையின் அடிப்படையில் கட்டமைக்கப்படும்போது மட்டுமே ஒரு சமுதாயம் செழிக்க முடியும் என்பதை நபிகள் நாயகம் நமக்குக் காட்டியுள்ளார். அன்னாரின் போதனையானது ஒற்றுமை, பணிவு மற்றும் கருணையை பிரதிபலிக்கிறது, அது இன்றும் நமது பாதையை ஒளிரச் செய்கிறது என்பது என் நம்பிக்கை.

ஒரு நாடாக நாம் இப்போது பல சவால்களை எதிர்கொண்டு வருகிறோம். எதிர்காலத்தில் மேலும் சவால்கள் வரக்கூடும். ஆனால் ஒரே மக்களாக, ஒரே குடும்பமாக மற்றும் ஒரே நாடாக ஒன்றிணைவதன் மூலம் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இன மத குல வேறுபாடுகளைப் பார்க்காமல் ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப அன்னார் காட்டிய வழிமுறைகளை நாமும் பின்பற்ற முடியும். அந்த வழிமுறைகளைப் பின்பற்றி இந்தக் கடினமான நேரத்தில் நாம் அனைவரும் நாட்டிற்காக ஒன்றாக அணிதிரள வேண்டும்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2025இல் வெளியிடப்பெற்றது